மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆலோசனையின்பேரில் 3/2 குறைந்த தூரம் செல்லக்கூடிய புறநகரப் பேருந்துகள், குளிர்சாதனப் பேருந்துகளாகப் படிப்படியாக இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது, கூண்டு கட்டுகின்ற பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் முடிவடைந்தபின் பேருந்துகள் வரும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வழித்தடத்தில் குளிர்சாதனப் பேருந்துகள் இயக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

115—

குடமுழுக்கு

***47410—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புற திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் கரிய பெருமாள்கரடு பகுதியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலைப் புனரமைப்பு செய்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அறம் எனும் தமிழினத்தின் மாண்பை, அகிலத்தில் நிலைநாட்ட ஆலயங்களில் அன்னதானத் திட்டம் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அன்பான வழியில் தமிழ்நாடு மாநிலத்தை மாட்சியுடன் நல்லாட்சி செய்துவரும் காவேரியின் காப்பாளர், உண்மையை மட்டுமே உரக்கப்பேசி ஊருக்கு உழைத்து வருபவர், உழவர் குலத்தின் ஒளிவிளக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களையும் வணங்கி, எனது பதிலினைத் தெரிவிக்கிறேன்.

2020 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறு கிராமப்புற திருக்கோயில் புனரமைப்புப் பணிகளுக்கு நிதி உதவி வழங்கிட கிராமப்புற திருக்கோயில் திருப்பணித் திட்டம் என்ற திட்டம் ஏற்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் திருக்கோயில்களுக்கு ரூ.1 இலட்சம் நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

சேலம் மாவட்டம், நெத்திமேடு, கரியபெருமாள்கரடு, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத சிறிய கிராம திருக்கோயிலாகும். எனவே, இத்திருக்கோயிலுக்கு கிராமப்புற திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் புனரமைப்பு மற்றும் கும்பாபிஷேகம் செய்ய வழிவகை இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் தந்த அன்னபூரணி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்கி, இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியில் கிராமப்புற திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் பயன்பெறும் திருக்கோயில்களின் எண்ணிக்கையை ஆயிரமாக உயர்த்தி, அறநிலையத் துறையில் ஒரு சாதனையைப் படைத்து வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், ரூ.565 கோடியில் 100 வறண்ட ஏரிகளுக்கு காவேரி உபரி நீர் நிரப்பும் திட்டத்தினைத் துவக்கி வைத்த காவேரி காப்பாளர். அண்ணன் அவர்களுக்கு ஒட்டுமொத்த சேலம் மாவட்ட மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்து, அம்மா அவர்களின் அரசு அறிவிக்கின்ற திட்டங்களுக்கெல்லாம் துறைதோறும் நிதி ஒதுக்கி துணை நிற்கின்ற கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும், வாய்ப்பு வழங்கிய தங்களையும் வணங்கி மகிழ்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் காலனி பகுதியில் உள்ள திருக்கோயில்கள் மட்டும் பயன்பெற்று வருகின்றன. தற்போது, ஆயிரம் திருக்கோயில்களுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளபடியால் ஆதி திராவிடர் காலனி மட்டுமல்லாது, கிராமப்புற எல்லை தெய்வங்களாக இருக்கின்ற செல்லியம்மன், மாரியம்மன், காளியம்மன், 18 ஆம் படி கருப்பு போன்ற சாமிகள் இருக்கின்ற திருக்கோயில்களுக்கும் திருப்பணி செய்ய இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும்வகையில் சட்டத்திருத்தம் செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் செல்வதோடு கரியபெருமாள்கரடு பகுதியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கும் திருப்பணி செய்ய இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும்வகையில் வழிவகை செய்துதர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், கரிய பெருமாள்கரடு அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு மலைப் பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–20

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கிராமப்புற திருக்கோயில் மிகவும் பழமைவாய்ந்த திருக்கோயில் என்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய நெத்திமேட்டில் அமைந்துள்ள அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியினைக் கொண்டு மலைப் பாதை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், மேற்படி பணியினை மேற்கொள்ள உபயதாரர்கள் முன்வரும்பட்சத்தில் உபய திருப்பணியால் அப்பணி மேற்கொள்ளப்படும். அதற்காக பிற நிதி ஆதாரங்களை ஆராய்ந்து, இத்திருக்கோயிலுக்கு மாண்புமிகு உறுப்பினர் கோரிய மலைப் பாதை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்

2020 மார்ச் 17]

செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரம், நெத்திமேடு கரிய பெருமாள்கரடு பகுதியில் அமைந்திருக்கின்ற அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மிகவும் பழமையும், பெருமையும் வாய்ந்த திருக்கோயில். இத்திருக்கோயில் கரிய பெருமாள்கரட்டின் மலையின்மேல் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் கருங்கற்களால் திருப்பணி செய்வதற்கு உபயதாரர்களுக்கு அனுமதி வழங்க ஆணை வழங்கப்பட்டு, அங்கே திருப்பணியும் நடைபெற்று வருகின்றது. செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, சஷ்டி, கிருத்திகை போன்ற நாட்கள் மட்டுமல்லாமல், பங்குனி உத்திரம், சித்ரா பௌர்ணமி போன்ற விசேஷ நாட்களிலும் பக்தர்கள் அங்கே முருகப் பெருமானை தரிசனம் செய்ய ஏராளமாய் வந்து கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், ஆண்டுதோறும், தமிழர் திருநாளாக இருக்கின்ற தைப் பொங்கல் திருநாளில் கரிநாளுக்கு இலட்சக்கணக்கான பக்தர்கள் மலைமேல் இருக்கின்ற ஞானதண்டாயுதபாணி சுவாமியை தரிசனம் செய்ய வருகை புரிந்தவண்ணம் இருக்கின்றார்கள். ஆகவே, இந்தத் திருக்கோயிலுக்கு மலைப் பாதை என்பது அத்தியாவசியமான, அவசியமான தேவையாக இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் உபயதாரர்களுடைய நிதி மட்டுமல்லாமல், நெடுஞ்சாலைத் துறை நிதி மற்றும் இவற்றுடன் பிற திருக்கோயிலின் உபரி நிதியினையும் பெற்று மலைப் பாதை அமைத்துத் தர மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று எனது கோரிக்கையை நிறைவேற்றித் தருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) கொரோனா வைரஸ் நோய் பரவுதலைத் தடுப்பதற்கு மருத்துவ வசதிகளை விரிவுபடுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா நோய் தொடர்பாக அரசு அறிவித்திருக்கக்கூடிய 'வருமுன் காப்போம்' நடவடிக்கைகளை நான் உள்ளபடியே வரவேற்கிறேன். அரசினுடைய அறிவிப்பைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அனைத்து நிகழ்ச்சிகளும், அது எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், 31–3–2020 வரை இரத்து செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் 2,221 பேர் மருத்துவ கண்காணிப்பில் இருப்பதாக சுகாதாரத் துறை அறிவித்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது மிக மிக அவசியமான ஒன்றாக அமைந்திருக்கிறது. அரசின் சார்பில் அனைத்து வசதிகளும் அரசு மருத்துவமனைகளில் உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்பது கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது. நோய் அறிகுறி பற்றி கண்டறியும் ஆய்வகங்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க வேண்டும். தனியார் மருத்துவமனைகளிலிருந்து recommendation, பரிந்துரைக்கப்படக்கூடியவர்களின் நோய் அறிகுறிகளையும் King நிறுவன ஆய்வகம் பரிசோதனை செய்தாக வேண்டும். தனியார் ஆய்வகங்களிலும் இந்தப் பரிசோதனை செய்ய அனுமதிக்கக்கூடிய வாய்ப்பையும் அரசு ஏற்படுத்த வேண்டும். ஏழையெளிய மக்களும் இதைப் பயன்படுத்தக்கூடிய வகையில் அதற்குரிய கட்டணத்தை